# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2205/11 - 2020 දෙසැම්බර් මස 09 වැනි බදාදා - 2020.12.09

*2205/11 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளைச் சட்டம்*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு ஹாலிஎல நீர் வழங்கல் செயற்திட்டத்தின் ரொக்தென்ன வத்த அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல: 5/3/BD/02
*நீர் வழங்கல் அமைச்சு,*
*35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*
*2020, நவெம்பர் 18.*

*அட்டவணை*

*பதுளை மாவட்டத்தில், ஹாலிஎல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 74ஏ, ஹாலிஎல கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரொக்தென்ன வத்த கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. கே. எல். சுதன்த ரத்னாயக அவர்களினால் 2018.04.27 ஆம் திகதி வரையப்பட்டுள்ள இலக்கம் 2357 திட்டப்படத்தில் துண்டிலக்கம் 1 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரொக்தென்ன என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 0.0441 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு: வீதி; கிழக்கு: வீதி மற்றும் இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி; தெற்கு: இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி; மேற்கு: ஒற்றையடிப் பாதை மற்றும் வீதி.*

***காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்:*** *ரொக்தென்ன வத்த, ஹபுகஸ்தென்ன பெருந்தோட்ட நிறுவனம், 95ஏ, நம்பபதன, இங்கிரிய.*


1A - G 33320— 31 (2020/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளைச் சட்டம்*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின்கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, பன்னல-மாகந்தர, குளியாபிட்டிய நீர் வழங்கல் திட்டத்தின், கன மீற்றர் 450 நீர்க் கோபுரம் மற்றும் கன மீற்றர் 300 நிலக்கீழ் நீர்த் தாங்கி மற்றும் உட்பிரவேசிக்கும் பாதையை நிர்மாணிப்பதற்குத் தேவையான காணிப்பகுதிகளைப் பெற்றுக் கொள்ளத் தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதிகளின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல: 5/3/KG/02
*நீர் வழங்கல் அமைச்சு,
35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2020, நவெம்பர் 18.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், குளியாபிட்டிய - மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 1142, கிதலவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், கிதலவ கிராமத்திலமைந்த, காணித் துண்டிலக்கம் 01 மற்றும் 02 எனும் குறிப்பிடப்பட்டுள்ள முழு அளவில் சுமார் 70 பர்ச்சஸ் அளவிலான "நாகலன் வத்த" எனும் பெயருடைய காணியில் கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித் துண்டுகள்.*

***துண்டின் இல.: 01 - காணியின் பெயர்: நாகலன் வத்த - காணியின் அளவு: 60 பர்ச்சஸ்.***

***காணியின் எல்லைகள்*** *: வடக்கு: காணி மறுசீரமைப்பு அதிகாரசபை மூலம் சுனில் அபேவர்தன இற்கு வழங்கப்பட்டுள்ள காணி; கிழக்கு: சிறுவர் பாடசாலை அமைந்துள்ள காணி மற்றும் கிதலவ-தியவல பாதை; தெற்கு: காணி மறுசீரமைப்பு அதிகாரசபை உரிமை கோரும் இந்தக் காணியின் எஞ்சிய பகுதி; மேற்கு: நாகலன் வத்த மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை உரிமை கோரும் காணி.*

***துண்டின் இல.: 02 - காணியின் பெயர்: நாகலன் வத்த - காணியின் அளவு: 10 பர்ச்சஸ்.***

***காணியின் எல்லைகள்*** *: வடக்கு: சிறுவர் பாடசாலை அமைந்துள்ள காணி; கிழக்கு : கிதலவ - தியவல பாதை; தெற்கு : கிராம உத்தியோகத்தர் காரியாலயம் அமைந்துள்ள காணி; மேற்கு: இந்தக் காணியின் எஞ்சிய பகுதி.*

***காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்;*** *காணித்துண்டு இலக்கம் 01 மற்றும் 02; காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, 475, கடுவெலவீதி, கனேஹேன, பத்தரமுல்லை.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.